தொழிலாளர் வைப்பு நிதி விவகாரம்

தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து அண்ணா பல்கலை. மேல்முறையீடு

சென்னை, மே 30: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பாக்கி 2 கோடியே 44 லட்சம் ரூபாயில், 30 சதவீதத்தை செலுத்தும்படி தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, அண்ணா பல்கலைக்கழகம் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் கடந்த 2006 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கோவை உள்ளிட்ட இடங்களில் தொடங்கப்பட்டன. கடந்த 2012 ஆம் ஆண்டு இந்த தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் அனைத்தும் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன. இந்நிலையில், கோவை அண்ணா தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதியை செலுத்தவில்லை என 2019 ஆம் ஆண்டு புகார் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து விசாரித்த தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியம், 2 கோடியே 44 லட்சம் ரூபாயை செலுத்தும்படி கோவை அண்ணா தொழில் நுட்ப பல்கலைக்கழகத்துக்கு உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை எதிர்த்து அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த தனி நீதிபதி, 2 கோடியே 44 லட்சம் ரூபாயில் 30 சதவீத தொகையை ஆறு வாரங்களில் டெபாசிட் செய்யும்படி, 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து அண்ணா பல்கலைக்கழகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கு நீதிபதிகள் சத்தியநாராயண பிரசாத் மற்றும் லட்சுமி நாராயணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, 'தனி நீதிபதி உத்தரவின்படி, வருங்கால வைப்பு நிதி பாக்கியில் 30 சதவீதமான 73 லட்சத்து 23 ஆயிரம் ரூபாயை செலுத்தும் நிலையில் பல்கலைக்கழகத்தின் நிதி நிலை இல்லை. தற்போதைய நிலையில் 10 லட்சம் ரூபாய் மட்டுமே செலுத்த முடியும்' என அண்ணா பல்கலைக் கழக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வழக்கின் விசாரணையை ஜூன் 5-ஆம் தேதிக்கு ஒத்திவைத்த நீதிபதிகள், மனுவின் நகலை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிய ஆணையர் தரப்புக்கு வழங்கும்படி, அண்ணா பல்கலைக்கழக தரப்புக்கு உத்தரவிட்டனர்.

அரசுப் பணி தேர்வுகள்: தமிழில் 40% மதிப்பெண் கட்டாயம்

அரசாணையை உறுதி செய்தது உயர்நீதிமன்றம்

சென்னை மே 30: அரசுப் பணிக்கான தேர்வுகளில் தமிழ் மொழித் தாளில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே பொது அறிவு மற்றும் திறனறிவு தேர்வுத்தாள் மதிப்பீடு செய்யப்படும் என்ற தமிழக அரசின் அரசாணையை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணி நிபந்தனைச் சட்டத்தில், 2021-ஆம் ஆண்டு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதில், அரசுப் பணிகளுக்கு நடைபெறும் தேர்வில், தமிழ் மொழித் தாளில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், அரசுப் பணிக்கான தேர்வுகளில் தமிழ் மொழித்தாள் தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே பொது அறிவு மற்றும் திறனறிவு தேர்வுத் தாள்கள் மதிப்பீடு செய்யப்படும் என 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த அரசாணையின் அடிப்படையில், தமிழகம் முழுவதும் காலியாக உள்ள 6 ஆயிரத்து 244 குரூப் 4 பணியிடங்களுக்கான தேர்வு அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டது.

இந்த அறிவிப்பாணையை எதிர்த்தும், தமிழ் மொழித் தாள் தேர்வில்

40 சதவீத மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே பொது அறிவு, திறனறிவு தேர்வுத் தாள் மதிப்பீடு செய்யப்படும் என்ற அரசாணையை எதிர்த்தும் நிதேஷ் உட்பட10 விண்ணப்பதாரர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்கள் தரப்பில்;தமிழ் மொழித்தாள் 150 மதிப்பெண்களுக்கும் பொது அறிவு, திறனறிவு, மனக்கணக்கு நுண்ணறிவு பாடங்களுக்கு என 150 மதிப்பெண்களும் என இரு பகுதிகளாக, தேர்வுகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து தேர்வுத்தாள்களின் மதிப்பெண்களும் தரவரிசைப் பட்டியலுக்கு கணக்கில் கொள்ளப்படும். இதனால், ஆங்கில வழியில் படித்த விண்ணப்பதாரர்கள் பாதிக்கப்படுவர். தமிழ் வழியில் படித்தவர்களுக்கு ஏற்கனவே 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும் நிலையில், இந்த புதிய அறிவிப்பின் மூலம் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு நூறு சதவீத இடஒதுக்கீடு வழங்குவதைப் போலாகி விடும்' என வாதிடப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் பி.எஸ்.ராமன், 'தமிழ்நாடு அரசுப் பணியாளர் பணி நிபந்தனை சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில் ஏற்கெனவே சில தேர்வுகள் நடத்தப்பட்டு விட்டது. அரசின் கொள்கை முடிவில் நீதிமன்றம் தலையிட முடியாது என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்' என வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகுதியை நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. குரூப் 4 பதவிகளை வகிப்பவர்கள், மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள தமிழ் மொழியில் புலமை பெற்றிருப்பது அவசியம் என்ற அரசுத் தரப்பு வாதம் சரியானது தான். தமிழ் மொழித் தாள் தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று மட்டுமே அரசு கூறுகிறதே தவிர, நூறு சதவீத மதிப்பெண்கள் பெற வேண்டும் என வற்புறுத்தவில்லை. அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாது' என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

புதுவையில் பள்ளிகள் ஜூன் 12-இல் திறப்பு

புதுச்சேரி, மே 30: வெயில் தாக்கம் காரணமாக, புதுவையில் ஜூன் 12-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று கல்வித் துறை வியாழக்கிழமை அறிவித்தது.

புதுவையில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை அனைத்து அரசுப் பள்ளிகளும் மத்திய பாடத்திட்டத்தின் கீழ் செயல்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனிடையே, வழக்கமாகக் கோடை விடுமுறை ஏப்ரல் மாதம் தொடங்கும் நிலையில், நிகழாண்டில் மே மாதம் தொடங்கி ஜூன் 5 வரை விடுமுறை விடப்பட்டிருந்தது. ஜூன் 6-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

புதுவையில் வெயிலின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதால், பள்ளிகள் திறப்பை தள்ளி வைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில், புதுவையில் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் என அனைத்தும் ஜூன் 12-ஆம் தேதி திறக்கப்படும் என பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் பிரியதர்ஷினி வியாழக்கிழமை அறிவித்தார்.

நியாயவிலைக் கடையில் 50 மில்லி மண்ணெண்ணெய்!

சிவகங்கை அருகேயுள்ள கொல்லங்குடி நியாயவிலைக் கடையில் தங்களுக்கு வழங்கப்பட்ட 50 மில்லி மண்ணெண்ணெயை காண்பிக்கும் பெண்கள்.

சிவகங்கை, மே 30: சிவகங்கை மாவட்டம், கொல்லங்குடியில் உள்ள நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ. 2-க்கு 50 மில்லி அளவுள்ள மண்ணெண்ணெய் மட்டுமே விநியோகிக்கப்பட்டதால், பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

சிவகங்கை அருகேயுள்ள கொல்லங்குடியில் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது.

இந்த நியாயவிலைக் கடையில் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ரூ. 15.40 என்ற விலையில் முன்னர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

பின்னர், மாநிலம் முழுவதுமுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அளவு குறைக்கப்பட்டது. இதன் காரணமாக, குறைந்த அளவில்தான் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் தொடக்கத்தில் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்ட நிலையில், பின்னர் அரை லிட்டர் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், கொல்லங்குடியில் உள்ள நியாயவிலைக் கடைக்கு ஏப்ரல் மாதத்துக்கான ஒதுக்கீடாக 38 லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே கிடைத்தது. இதை இங்குள்ள 950 குடும்ப அட்டைதாரர்களுக்கு பிரித்து வழங்க நியாய விலைக் கடை ஊழியர் முடிவு செய்தார். அதன்படி, புதன், வியாழக்கிழமைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ. 2-க்கு 50 மில்லி மண்ணெண்ணெயை விநியோகம் செய்தார். நியாய விலைக் கடை ஊழியரின் இந்தச் செயல் குடும்ப அட்டைதாரர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இது சமூக வலைதளங்களிலும் பரவியது.

இது குறித்து மாவட்ட வழங்கல் அலுவலர் சபீதாபேகம் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் 4,19,325 குடும்ப அட்டைகள் உள்ளன. மாவட்டத்துக்கு கடந்த மார்ச் மாதத்தில் 60,000 லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு வரப்பெற்றது.

ஏப்ரல் மாதத்துக்கு 24,000 லிட்டராக குறைந்தது. இந்த மண்ணெண்ணெய் மாவட்டம் முழுவதும் உள்ள 829 நியாய விலைக் கடைகளுக்கு பிரித்து வழங்கப்பட்டு வருகிறது. போதிய அளவு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு கிடைத்தால் மட்டுமே இதற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்றார் அவர்.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட பெண் யானை

கால்நடை மருத்துவக் குழு சிகிச்சை

மதுக்கரை, மே 30: மருதமலை வனப் பகுதியில் உடல்நலக் குறைவுடன் காணப்பட்ட பெண் யானைக்கு வனத் துறை கால்நடை மருத்துவக் குழுவினர் சிகிச்சையளித்து வருகின்றனர் (படம்).

இந்நிலையில், மருதமலை அடிவார வனப் பகுதியில் ரோந்து சென்றபோது, யானையின் பிளிறல் சப்தம் கேட்டுள்ளது.

இதையடுத்து அங்கு சென்று பார்த்தபோது, பெண் யானை ஒன்று உடல்நலக் குறைவால் படுத்திருந்ததும், அருகிலேயே குட்டி ஒன்று நின்றுகொண்டிருந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, ரோந்து அலுவலர்கள் மாவட்ட வன அலுவலர், வனச் சரகர் ஆகியோருக்கு தகவல் அளித்தனர்.

இதைத் தொடர்ந்து கால்நடை மருத்துவக் குழுவினருடன் வந்த வனத் துறையினர், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட யானைக்கு பழங்களைக் கொடுத்தனர்.

மேலும், குளுக்கோஸ் உள்ளிட்ட மருந்துகளை செலுத்தி அதன் உடல்நிலையைக் கண்காணித்து வருகின்றனர்.

யானையின் அருகிலிருக்கும் குட்டியையும் வனத் துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி — அமைந்தகரை கிளை
இளாஹாபாத் அலகாபாத்
மையக் எண்.12, புதிய எண்.36, முல்லை அவென்யூ, ஜெனரல் நகர், சென்னை - 30. தொலைபேசி : 044-26263971/26211218.
மின்னஞ்சல் : aminjikara@indianbank.co.in

கோரிக்கை அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 14.03.2024 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.

பெறுநர், (1) ஸ்ரீ. J. ஆனந்த சேகரன், (கடன்தாரர்), த/பெ ஜெயசேகரன், 14/1, அகஸ்தியர் தெரு, தேவராஜ் நகர், சாலிகிராமம், தசரதபுரம், சென்னை - 600 093. (2) ஸ்ரீமதி. கிளாடில் பிரியதர்ஷினி, (இணை-கடன்தாரர்), க/பெ J. ஆனந்த சேகரன், எண்.509/4, VARS ALL SEASON, Off. ஏர்போர்ட் ரோடு, 4 CRS கோனியா அக்ரஹாரா, பெங்களூர் - 560 017.

பொருள் : இந்தியன் வங்கி, அமைந்தகரை கிளையில் உள்ள தங்கள் வீட்டு கடன் கணக்கு எண்.895938571 - சம்பந்தமாக.

நீங்கள் பெற்ற கடனுக்காக 12.03.2024 வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.1,87,41,084.65 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஏழு லட்சத்து நாற்பத்து ஒராயிரத்து எண்பத்து நான்கு மற்றும் பைசா அறுபத்து ஐந்து மட்டும்) இதில் மேலும் 13.03.2024 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.

12.03.2024 அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான ரூ.1,87,41,084.65 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஏழு லட்சத்து நாற்பத்து ஒராயிரத்து எண்பத்து நான்கு மற்றும் பைசா அறுபத்து ஐந்து மட்டும்) திரும்ப செலுத்துமாறு 13.03.2024 தேதியிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது/ஒப்புகை பெறப்படவில்லை.

நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான ரூ.1,87,41,084.65 மேலும் 13.03.2024 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணைவைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும். வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) வரைத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அட்டவணை

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்து : ஃபிளாட் எண்.F1, 1வது தளம், ரோடு பக்கம், மனை எண்.6, கதவு எண்.3, VOC தெரு (பழனை கோயில் தெரு), ஆஃபிசர்ஸ் காலனி விரிவாக்கம், முகப்பேர் கிழக்கு, சென்னை - 600 037-ல் உள்ள குடியிருப்பு சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். மொத்தம் 2800 சதுர அடியில் UDS 466.66 சதுர அடி. கட்டப்பட்ட அளவு 940 சதுர அடி. சர்வே எண்.127/1 பகுதியில் அடங்கியுள்ளது. முகப்பேர் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது மற்றும் கொள்ளூர் துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை வடக்கு பதிவு மாவட்டம், முகப்பேர் எல்லைக்குள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.5, தெற்கில் : 28 அடி ரோடு, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : மனை எண்.7.

தேதி : 31.05.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இடம் : சென்னை இந்தியன் வங்கி.

யூனியன் பேங்க் ஆப் இந்தியா — வேளச்சேரி கிளை
எண்.15, எலிபேண்ட் ஸ்கொயர், 15வது தெரு, டான்சி நகர், வேளச்சேரி, சென்னை-600042. போன்:044-22435806
மின்னஞ்சல் : ubin0557901@unionbankofindia.bank
சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கானது)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் (சட்டம் எண். 54(2002) சட்டம், 2002 SARFAESI சட்டம் மற்றும் பிணைக்காப்பு (இரண்டாம்) விதிகள் 2002ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, வேளச்சேரி கிளை, எண்.15, எலிபேண்ட் ஸ்கொயர், 15வது தெரு, டான்சி நகர், வேளச்சேரி, சென்னை-600042, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 13(12) பிரிவு மற்றும் விதி 3ன் படி 12.02.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்தாரர்கள்: 1.திரு. ஸ்ரீனிவாஸ். C, த/பெ. திரு. சந்திரசேகரன் & 2. திருமதி. அனுபிரியா. S, க/பெ. திரு. ஸ்ரீனிவாஸ்.C, இருவரின் முகவரி: எண்.7/44, முத்தாலம்மன் கோயில் தெரு, சடாஸ், கல்பாக்கம் -603102. ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள 12.02.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.17,97,545.27 (ரூபாய் பதினேழு இலட்சத்து தொன்னூற்று ஏழு ஆயிரத்து ஐநூற்று நாற்பத்து ஐந்து மற்றும் பைசா இருபத்து ஏழு மட்டும்) இந்த அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அனுப்பப்பட்டது.

கடன்தாரர் கடன்தொகையை திரும்ப செலுத்த தவறியதால், கடன்தாரர் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை பிரிவு 13 துணைப்பிரிவு (4)ன் விதி 8ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும் மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்சொன்ன விதியின் படியும், கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 28.05.2024 அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் மேற்படி சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக் கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, வேளச்சேரி கிளைக்கு செலுத்தவேண்டிய 28.05.2024 அன்றுள்ளபடி ரூ.18,59,531.27(ரூபாய் பதினெட்டு இலட்சத்து ஐம்பத்து ஒன்பது ஆயிரத்து ஐநூற்று முப்பத்து ஒன்று மற்றும் பைசா இருபத்து ஏழு மட்டும்) மற்றும் அதன் மீதான எதிர்கால வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) வரைத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அடமானத்தில் உள்ள அசையாச் சொத்தின் விளக்கம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:
வகை எண்.1: அஸ்திணாபுரம் கிராமம் மைமாஸ் எண்.230 மற்றும் 231, சர்வே எண்.6/11-B2 இல் அடங்கிய குரோம்பேட்டை, நேரு நகர், சங்கர்லால் ஜெயின் தெரு, மனை எண்.9 பகுதி, கதவு எண்.2 பகுதி இல் அமைந்துள்ள 2800 ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில் : திருமதி. இராஜலட்சுமி அவர்களின் உரிமைப்பெற்ற மனை; தெற்கில் : பழைய மனை எண்.10; கிழக்கில் : திரு.P. K. முத்துகிருஷ்ணன் அவர்களின் உரிமைப்பெற்ற சங்கர்லால் ஜெயின் தெருவில் உள்ள, மனை எண்.9 இன் எஞ்சியுள்ள பாகம்; மேற்கில் : திரு.M.K. ஸ்ரீனிவாஸாச்சாரியார் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம்; நாற்புறப்பகுதி: கிழக்கு மேற்காக வட புறம்:60அடி, கிழக்கு மேற்காக தென் புறம் :60அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்:34அடி 4 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக மேற்குபுறம்:34அடி 4 அங்குலங்கள்; அதனுடன் '10'-'4' அகல பாதை '80' நீளத்தில், மொத்தப் பரப்பளவு 2880ச.அடி.; வகை எண்.II: அஸ்திணாபுரம் கிராமம் மைமாஸ் எண்.230 மற்றும் 231, சர்வே எண்.6/11-B2 இல் அடங்கிய குரோம்பேட்டை, நேரு நகர், சங்கர்லால் ஜெயின் தெரு, மனை எண்.9 பகுதி, கதவு எண்.2 பகுதி இல் அமைந்துள்ள 1920 ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில் : திருமதி. இராஜலட்சுமி அவர்களின் உரிமைப்பெற்ற மனை; தெற்கில் : திரு.D. பாலாஜி அவர்களின் உரிமைப்பெற்ற காலி நிலம்; மேற்கில் : திரு. D. பாலாஜி அவர்களின் உரிமைப்பெற்ற காலி நிலம்; நாற்புறப்பகுதி: கிழக்கு மேற்காக வட புறம்:80அடி, கிழக்கு மேற்காக தென் புறம் :80அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்:24அடி; வடக்குத் தெற்காக மேற்குபுறம்:24அடி; மொத்தப் பரப்பளவு 1920ச.அடி. தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பல்லாவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்டுட்டு அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு வகைகளின் மொத்தப் பரப்பளவு 4800 ச.அடி.

தேதி: 28.05.2024 அதிகாரபூர்வ அதிகாரி,
இடம்: சென்னை யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
ஸ்ரீராம் நகர் கிளை: 135, TTK ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018
Ph: 044 - 2499 7205, E-mail - iob0479@iob.in
(APPENDIX IV) அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [(Rule 8(1)]

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (Second) Act, 2002 (Act 54 of 2002)-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஸ்ரீராம் நகர் கிளையின் கீழ் கையொப்பமிட்ட அதிகாரியான அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன் படி 23.01.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகையான 23.01.2024 அன்றுள்ளபடி ₹ 24,87,601.03 (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து அறுநூற்று ஒன்று மற்றும் பைசா மூன்று மட்டும்) மற்றும் வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கடன்தாரர்கள்: Lt.E.ஜம்புலிங்கம் & Mrs.J.தேவராணி, W/o.Lt.E ஜம்புலிங்கம் மற்றும் Lt.E ஜம்புலிங்கம் அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்கள்- 1.Mrs.J.தேவராணி, W/o.Lt.E.ஜம்புலிங்கம் 2.Mr.தினேஷ் அமிர்தலிங்கம், S/o.Lt.E. ஜம்புலிங்கம் & 3.Mrs.நீலவதி, M/o.Lt.E.ஜம்புலிங்கம், அனைவரது வசிக்கும் முகவரி: ப்ளாட் எண்.03, பழைய எண்.15, புதிய எண்.1/331, இந்திரா காந்தி தெரு, காரப்பாக்கம் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8-ன்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 27.05.2024 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வரவேண்டிய கடன் தொகையான 23.01.2024 அன்றுள்ளபடி ₹ 24,87,601.03 மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். கோரிக்கை அறிவிப்பு வெளியிட்ட பிறகு செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருப்பின் அதுபோக. சுவாதீனம் எடுத்த தேதியிடி கடன் நிலுவைத்தொகை ₹ 25,00,827.83 (DR.) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக் கொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) வரைத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

(CERSAI ID No. – 400076914220) சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.118/5, புதிய சர்வே எண்.118/5C & 118/5D, பட்டா எண்:1111, பட்டா படி சர்வே எண்.118/5C, காரப்பாக்கம் கிராமம், ப்ளாட் எண்.3, பழைய எண்.15, புதிய எண்.1/331, இந்திரா காந்தி தெரு, காரப்பாக்கம் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள முதல் மற்றும் இரண்டாவது தளத்தில் கட்டிட பரப்பு 2600 சதுர அடி, தனி, முதல் மற்றும் இரண்டாவது தளத்தில் 300 சதுர அடி பொது இடம். மொத்தமுள்ள 2213.50 சதுர அடி நிலத்தில் 900 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த நுண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Sri.வாசுதேவன்-க்கு சொந்தமான நிலம், தெற்கு: Sri.சாரங்கன்-க்கு சொந்தமான நிலம், கிழக்கு: Sri.உதய் குமார்-க்கு சொந்தமான நிலம், மேற்கு: இந்திரா காந்தி குறுக்கு தெரு. உரிமையாளர் பெயர்: Lt. E.ஜம்புலிங்கம் & Mrs. J. தேவராணி

தேதி: 27.05.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி — ஒட்டேரி கிளை
இளாஹாபாத் அலகாபாத்
எண்.112, விஸ்வநாதன் ரோடு, ஒட்டேரி, சென்னை - 12.
தொலைபேசி : 044-2662 3810/1021.
மின்னஞ்சல் : otteri@indianbank.co.in

கோரிக்கை அறிவி